
ஜூபிடர்
ரிலீஸ்
விநோதாவின்
ஸ்த்ரீஸாகஸம்
தமிழ்
1½ அணா.
உரிமையாளர்கள் பெல் பிக்சர்ஸ்

# ஸ்திரீ ஸாகசம்

| | | |
|---|---|---|
| கதை | ... | சமுத்ராலா ராகவாச்சாரியா |
| வசனம் | ... | உதயகுமார் |
| பாட்டுகள் | ... | உடுமலை நாராயணகவி |
| சங்கீதம் | ... | C. R. சுப்புராமன் |
| நடனம் | ... | வேதாந்தம் ராகவய்யா |
| ஆர்ட் டைரக்ஷன் | ... | வாலி கோட்கான்கர் |
| கேமிரா | ... | B. S. ரங்கா |
| மேக்கப் | ... | S. மங்கய்யா<br>V. வெங்கடேஸ்வர ராவ் |
| ஆடை அலங்காரம் | ... | K. அச்சுத ராவ் |
| எடிட்டிங் | ... | P. V. நாராயணன் |
| ஸ்டுடியோக்கள் | ... | நெப்டியூன்<br>வாஹினி<br>ஸ்டார் கம்பைன்ஸ்<br>ரேவதி |
| பின்னணி சங்கீதம் | ... | P. லீலா<br>ஜிக்கி<br>தக்ஷிணாமூர்த்தி |

டைரக்ஷன் : வேதாந்தம் ராகவய்யா

## நடிகர் & நடிகைகள்

| | |
|---|---|
| நாகேஸ்வர ராவ் | அஞ்சலி தேவி |
| C. S. R. ஆஞ்சநேயலு | சூர்யபிரபா |
| பாண்டியன் | கிரிஜா |
| ரேலங்கி | C. வரலக்ஷ்மி |
| ராமமூர்த்தி | அன்னபூர்ணம்மா |
| சீதாராம் | விஜயலக்ஷ்மி |
| சதாசிவ ராவ் | |
| ரங்கசாமி | |
| A. L. நாராயணன் | |
| A. வெங்கடேஸ்வர ராவ் | |

# ஸ்திரீ ஸாஹஸம்

## கதைச் சுருக்கம்

மணப்பதற்கோ, மகுடம் சூடுவதற்கோ சிறிதும் சம்மதிக்காத ஒரு மன்னன் மகனின் உருவப் படத்தைக் கண்டு உள்ளம்பறி கொடுத்து அவன் திருமணத்துக்கு விதிக்கும் மூன்று நிபந்தனைகளை யும் பதியின் கட்டளையாகக் கொண்டு பல கஷ்டங்கள் பட்டு, முடி வில் வெற்றி கொண்டு மன்னனைச் சேரும் ஒரு இளவரசியின் கதையே "ஸ்திரீ ஸாஹஸம்"—

சக்ரவர்த்தி மஹா வீரர் மணம் செய்ய விரும்பாத தன் மைந் தன் ராஜா என்பவனை, மணம் செய்தே ஆகவேண்டுமெனக் கோபத்துடன் வற்புறுத்தி, அதற்கெனப் புதிய முறையில் ஏற்பாடு செய்த சுயம்வரத்தில் சிற்றரச குமாரிகள் யாவரையும் கலந்து கொள்ளச் செய்கிறார்.

இளவரசன், தந்தை கட்டளையை மீறுமலும் தான் மணவாழ்க் கை நடத்தாமலுமிருக்க தந்திரமாக ராஜ கன்னிகைகள் எவரா லும் நிறைவேற்ற முடியாத மூன்று நிபந்தனைகளை விதித்து அவை களைச் சாதிப்பவளையே தான் மணப்பதாகக் கூறுகிறான்.

முதல் நிபந்தனை: பிறந்த வீட்டு தனம், புகுந்த வீட்டுப் பொக் கிஷம் இரண்டுமில்லாமல் மாணிக்க பவனம் கட்டவேண்டும்.

இரண்டாவது: தன் பதிக்கும் தெரியாமல், கற்பும் கெடாமல் தாயாக வேண்டும்.

மூன்றவது: நாம் இனிக் காதலிக்கப் போகும் கன்னியைத் தான கவே கொண்டுவந்து நமக்கு மணம் செய்து கொடுக்கவேண்டும்.

நிபந்தனைகளைக் கேட்டு எல்லா ராஜ குமாரிகளும் எழுந்து செல்கின்றனர். ஆனல் மனோஹரி மட்டும் போகவில்லை. நிபந் தனைகளை நிறைவேற்ருவிடில் தண்டனை பெறவும் தயார் என்கி ருள். வேறு வழியில்லாமல் ராஜா விவாகத்துக்கு இசைகிருன்.

திருமண தினத்தன்றே தாய் தந்தையர் தடுத்தும் கேளாமல் நண்பன் அழகேசனுடன் ராஜா புறப்படும் தருவாயில் மனோஹரி தன் கற்பின் சாக்ஷியாக மணமாலை ஒன்றை அளித்து தன் கற்பு கெடாத வரை இம்மாலையும் வாடாது என்று சொல்லுகிருள். மறு நாள் மனோஹரியும் நிபந்தனைகளை நிறைவேற்றப் புறப்படும்போது அவள் மந்திரி தன் குமாரி ராணியையும்கூட அனுப்பி, "உயிர் கொடுத்தாவது மனோஹரியின் வாக்கை காப்பாற்று" என உத்தர விடுகிருன்.

பல இடம் சுற்றிய நண்பர்கள் பட்சி ராஜ்யம் சேர்ந்தனர். அது ஓர் தலைகீழ் ராஜ்யம். அங்கு பகல் இரவு, இரவு பகல், அங்கு பகலில் எல்லோரும் உறங்குவதன் காரணத்தைப் பாட்டி யிடம் விசாரிக்கும்போது, காவலாளிகள் "இஷ்டமிருந்தால் படுங் கள் இல்லாவிடில் ஓடுங்கள்" என்று விரட்ட இருவரும் ஒரு மரத் தடியில் படுக்கின்றனர். அப்போது அவ்வூர் இளவரசி கோமளி யின் கானம் கேட்டு எழுந்து சென்று அவளைக் கண்டவுடன் காதல் கொள்கிருன். எப்படியும் இளவரசியை அடைய நினைத்த

ராஜா, பாட்டி மூலம் அந்நாட்டை யாள்வது ஒரு பைத்தியக்கார ராஜாவென்றும், சர்வாதிகாரி தன் இஷ்டப்படி மக்களைக் கஷ்டப் படுத்துகின்றுனென்றும், அறிந்து, அவனுக்கு எதிராக மக்களிடம் தந்திரமாகப் பிரசாரம் செய்து, மன்னனையும் இணக்கி கோதண் டத்தின் மண்டையிலடித்துச் சர்வாதிகாரி யாகிருன்:

பதவியை இழந்த கோதண்டம் பழிக்குப் பழி வாங்க, ராஜா வைப் பற்றிய தகவல் அறிந்து வர, தன் ஆட்கள் சாகு பேகுவை அனுப்புகிருன். அழகேசனைச் சந்தித்த சாகு பேகு, விபரம் அறி வதை விடுத்து, தாரா என்பவளை மணக்க, அழகேசனுக்கு உதவி செய்கின்றனர். இது இப்படியிருக்க,

மனோஹரியும் ராணியும் பல ஊர் சுற்றி முடிவில் நாட்டிய மாடிக் கிடைக்கும் பணத்தால் மாணிக்க பவனம் அமைக்கத் திட்டமிட்டு, இந்த ரகஸ்யம் வெளிப்படாதிருக்க, மனோஹரி தோழி யாகவும், தோழி ராணி மனோஹரியாகவும் மாறி நடந்து கொண்டு நாட்டியம் நடத்தி வரும்போது காண வந்த சாகு பேகு மூலம் தங் கள் ராஜாதான் தற்போதைய பட்சி ராஜ்ய சர்வாதிகாரியென்று அறிகிருர்கள். ராணி தான் ராஜாவின் மனைவியென்று சாகு பேகு தெரிந்து கொள்கின்றனர்.

பதவி யிழந்த கோதண்டம், சாகு பேகு மூலம் நாட்டியம் நடத்துபவரான ராணி, ராஜாவின் மனைவி என்று அறிந்தவுடன் அவன் மூலம் அவன் மானத்தைப் போக்கி, விரட்ட நினைத்து, ராணியின் நடனத்துக்குச் சென்ருன். தோழி மனோஹரி மூலம் ராணி விருப்பம் அறிந்து மாணிக்கபவனம் கட்டிக் கொடுத்து ராணியை அடைந்து அவளிடம் கடிதம் பெற்றுத் திரும்புகின்ருன்.

இதன் நடுவில் சர்வாதிகாரியான ராஜாவுக்கு அந்தப்புரத்தில் கோமளியுடன் நெருங்கக் கிடைத்த வாய்ப்பு காதலை வளர்த்தது. கோதண்டம், நூதன பாஷையில் எழுதப்பட்டுள்ள கடிதம் காட்டி பைத்திய ராஜாவின் முன், ராஜாவை துச்சமாகப் பேச முதலில் அவனே ஏமாந்ததை அறிந்து தண்டிக்கப்படுகிருன்.

இவ்வித மிருக்க பைத்திய ராஜாவுக்கு ராஜகட்டி பிளவை உண்டாகி பல வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியாதிருக் கவே குணப்படுத்துவோருக்குத் தன் உயிரையோ, வேண்டிய பொன்னையோ, தன் அருமைப் பெண்ணையோ கொடுப்பதாகப் பிரகடனம் செய்கிருன். இதைக் கேட்ட ராஜாவும் கோமளியும் தனியே சந்தித்து எங்காவது சொல்லாமல் ஓடிப்போனல் என்ன என்று பேசியதை தற்செயலாக அங்கு வந்த மனோஹரி கேட்டு வருந்துகிருள். அப்போது மரத்தின் மீதிருந்த பறவைகளின் சம்பாஷனை மூலம் கட்டியை குணப்படுத்த வழி தெரிந்ததால் உடனே புறப்பட்டு பயங்கரமான சாகஸங்களை செய்து மருந்து இருக்குமிடமடைந்து ரணபேரி மூலிகை எடுத்துக்கொண்டு சித்தர் வேஷத்தில் ராணியுடன் திரும்பிக் கட்டியை குணப்படுத்திக் கோமளியை அழைத்துச் செல்கிருள்.

சித்தர் ஒருவர் கோமளியை அழைத்துச் சென்ற செய்தி கேட்டு ராஜா மூர்ச்சையானதை அழகேசன் மூலம் அறிந்த ராணி, சித்தர் வேடத்தில் ராஜாவைச் சந்தித்துக் கோமளியைச் சந்திக்க தன் விடுதிக்கு வரச் செய்கிறாள். அதேபோல் ராஜா சென்று கோமளி யென்று மனோஹரியை சேர்கின்றான். இப்படிச் சாது விடுதிக்கு தினமும் வந்து போவதைக் கண்ட கோதண்டம் வஞ்சம் தீர்க்கத் தருணமிதென்று பைத்திய ராஜாவின் உத்திரவு பெற்று ராஜாவை சிறை வைத்து தானே மீண்டும் சர்வாதிகாரியாகிறான்.

ராஜா பிடிபட்டதைக் கண்டு கலங்கிய கர்ப்பிணி மனோஹரி யைத் தேற்றி, இடம் மாற்றி காட்டில் வசிக்கச் செய்தபோது கோமளி ராஜாவை நினைத்துத் தப்பி ஓடுகிறாள். கோமளி காணமற் போகவே வளைகாப்பு விழாவுக்குக் கோமளியுடன் வருவதாக மனோஹரியைத் தேற்றி ராஜ்யத்துக்கு அனுப்பிவிட்டு ராணி பட்சி ராஜ்யம் செல்கிறாள். அதே சமயம் ராஜாவும் அழகேசனுதவி யால் சிறையிலிருந்து வெளியேறிக் கோமளியைத் தேடிச் செல்கி றான். ராஜா ஓடிய விஷயமாகப் பைத்திய ராஜாவுடன் கோதண்டம் விவாதிக்கும் சமயம் சாது வேஷத்தில் வந்த ராணி, கோமளி காணமற்போன செய்தி தெரிவிக்க, கோதண்டம் கோமளி யைத் தேடிப் புறப்படுகின்றான். கோமளியைக் கண்டு பிடித்து இரகசிய குகையில் அடைத்து பலாத்காரம் செய்கிறான்.

ராஜ்யம் சென்ற மனோஹரி ஆண் மகவைப் பெறுகிறாள். அதற்குச் சக்ரவர்த்தி விழாக் கொண்டாடுவதைப் பறையறிவிப்பு மூலம் அறிந்து, கோபாவேசமாகத் தன் ராஜ்யம் செல்கிறான் ராஜா. குழந்தை தொட்டிலில் இடப்பட்டு விழா நடைபெறுவதைத் தடுத்து, மனோஹரியும் குழந்தையும், ராஜவம்சத்தவர்களில்லை யென்றும் மனோஹரி வேசியிலும் கேடுகெட்டவள் என்றும் கூறி, அவளை வெளியே தள்ள முயலும்போது சக்ரவர்த்தியார் குறுக் கிட ராஜ சபையில் அவள் குற்றத்தை எடுத்துக் கூறி வாதாடு கிறான். சக்ரவர்த்தி தீர்ப்பு கூற மறுத்தபோது உயிரோடு மனோ ஹரியை எரிக்கும்படி தானே தீர்ப்புக் கூறுகிறான்.

கோதண்டம் தான் கோமளியை மறைத்து வைத்திருக்கிறா னென்று சந்தேகித்த ராணி குறத்தி வேஷத்தில் கோதண்டத்தின் ரகஸ்ய குகையை அறிந்து பைத்திய மன்னனிடம் வரும்போது பின் தொடர்ந்த சாகு பேகுவைக் கொன்று பைத்திய ராஜாவின் உதவியால் கோமளியை மீட்கிறாள். கட்டப்பட்ட கோதண்டத் துடன் கோமளியையும் அழைத்துக்கொண்டு ராஜ்யம் செல்கிறாள்.

பெருங்கூட்டத்தின் நடுவே மனோஹரி தீயில் தள்ளப்படும் சமயம் ராணி ஓடி வந்து தடுக்கின்றாள். மனோஹரி தகுந்த சாட்சி யங்களுடன் மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றியதை நிரூபிக் கிறாள். ராஜா தன் தவறை உணர்ந்து மனோஹரியை மனைவியாக ஏற்றுக் கொள்கிறான்.

சுபம்.

# ஸ்திரீ ஸாகஸம்

---

## பாட்டு (1) மனோஹரி

கலைகளின் மாமணி கற்பின் உயிர் மானினி
நம் பாரத பெண் மணி
விலை மதியாத மலர் போல் காணும்
வெண் மதி நில வினிலே
    விதம் விதமாய்
    நடம் புரியும் (கலைகளின்)

காணும் உலகின் அழகை எளிதாய்
கண்ணை கவரும் வண்ண மாய்
வானோர் புகழும் எழில் சேர் ஓவியம்
    வரைந்திடவும்
    தெறிந்தவராம் (கலைகளின்)

ஹே மாந்தளிராலே வில் வளைத்தே
வண்டெனும் நாணை பூட்டி
மலர் வாளீதன யேவும் மாதர் நாமே—மாதர் நாமே
மதவேள் குலாவும் காதல் ராணி—ரதி நானவே
மன மோஹன வடிவில் என்னாளும்
வெற்றி கொள்வாரே (கலைகளின்)

## பாட்டு (2) அழகேசன்

ஆண் : கும்தரிகிடதக கும்தரிகிடதக
கும்தகும்ததக கும்தகும்ததக
கும்தக கும்தக கும்தக
கும்தக கும்தத்தாம்
கும்தக கும்தத்தாம்
உன்னைத்தான் பெண்ணே ஏய்
உன்னைத்தான் பெண்ணே
உன் கண்ணில் பார் என்னை
உன்னை கல்யாணம் செய்ய
எண்ணித்தான் சொன்னேன்
மனம் உருகித்தான் மெலிவுற்றே
ஒரு முத்தம் கண்ணே (கும்தரிகிடதக)

பெண் : கண் மயக்குக்கார கள்ளத்தன பேச்சா
உன் காதல் உண்மையானால் கல்யாணம் செய் பேஷா
என்னை கல்யாணம் செய் பேஷா—சிறு
கன்னி நான் இன்னமும் கைபடா ரோஜா
அட ராஜா

ஆண் : காதல் உண்மைதானே—சுவை
கனிந்த கொம்புத் தேனே
கலங்காதே மானே—கலந்துகொள்ளுவேனே
காணாமல் போனால் நான் வாடுவேன்
எங்கும் தேடுவேன் . . . . . . சேவை
செய்குவேன், கைவிடேன்
பையா நீ வாவே

பெண் : சம்மதம் ஆனால் என்னை சந்தேகித்தால்
பொல்லாதே நில்லாதே குறைகள் சொல்லாதே
தயவாய் தாலிகட்டிடும் சட்டம் செல்லாதே

ஆண் : தாலிகட்டி போட்டால் வேலிகட்ட மாட்டேன்
சமமான அதிகாரம் செய்யவே மாட்டேன்
ஏ . . . தங்கமே தைலல்லே சம்மதம் சொல்லே
தற்க் கம்மேன் வெட்கமோ முக்காடை தள்ளே
உன் முக்காடைத் தள்ளே

பெண் : சரி சம்மதித்தேன் ஸ்வாமி

ஆண் : இப்போ உங்கம்மா எனக்கு மாமி

பெண் : காமா சோமா கன்னா பின்னா மன்னா
தென்னா மறவாதே

ஆண் : கனியே மணியே குயிலே கிளியே
கம் கம்மென்னும் ஜவ்வாதே

பெண் : கற்பகமே

ஆண் : அற்புதமே

பெண் : உம் . . . இப்படிவா

ஆண் : ஆ . . . அப்படிச்சொல்

பெண் : கடலே

ஆண் : மலையே

பெண் : உயிரே

ஆண் : உடலே

பெண் : கா

ஆண் : தல்

பெண் : ஈ

ஆண் : தே

ஆண் :<br>பெண் : } கருதிப் பஞ்சனைமேலே<br>காணும் கோழிகள் போலே<br>மருவித்தான் சுகமுற்றே<br>மகிழத்தான் வாழ்வோம்

## பாட்டு (3) மனோஹரி

நீதானல்லால் ஆதாரம் யார்
நீதி வடிவான மாதா இனிமே (நீதா)

காதல் நிறை வேறுமோ—எந்தன் வாழ்வே
கானல் நீராகுமோ அறியேன் (நீதா)

பிரேமை சுகமே பெறலாம் எனவே
பேதை கனவே கண்டேனே
தீமை உருவானதே என் செய்வேன்
தேவி ஜகதீஸ்வரீ தாயே (நீதா)

பாதுகாப்பாய் என்றுன்னை நம்பி
பதி முன் வைராக்கியம் கொண்டேனே
பழி வருமோ பலன் வருமோ
பாரமும் உனதே தாயே (நீதா)

## பாட்டு (4) கோமளம்

குஹூ குஹூ ராகம் சிங்கார ரஸ மாகவே
கோகிலம் கொம்பில் நின்று கூவும் ஆஹா ஹா
(குஹூ குஹூ)

புது மணம் வீசும் பூமேனி வண்ணம் நாணவே
பூங்கொடி ஆடிடாமல் ஏங்கி நின்று நாணவே
பூவையரான எம்மை காணீர் ஏனோ நாணம்
ஜிலு ஜிலு என்வே சிலம்பு தாளம் போடுதே
சிராக தோகை ஆடுதே

தேனுகர் வண்டு நாளும் சேர்ந்து சுதி கூடுதே
கண் சிநேகம் தனை நாடுதே
சேயிளை நானும் வாருமென்றால் ஏனோ நாணம்
அணிதரும் ஆடை முந்தாணி கண்ணை மூடுதே
கரங்கள் ரெண்டும் தேடுதே
ஆசையில் கண்கள் ஏதோ கண்டே—மனம் ஓடுதே
அஹா ஆனந்தம் ஊடாடுதே
ஆடிட வந்திடாது மேலே
ஏனோ நாணம் (குஹூ குஹூ)

## பாட்டு (5) அழகேசன்

தூங்கப்போ தூங்கப்போ தூங்கப் போங்கய்யா
கண்மூடித் தூங்கப்போ தூங்கப் போங்கய்யா
இது பகல் அல்லவே பாதி இரவு தானய்யா
படுக்கப்போ படுக்கப்போ படுக்கப்போ அய்யா
பவழமும் சிகப்பு கோவை பழமுமே—சிகப்பூ
படுத்து தூங்கா விட்டால் உன்—கண்ணும் சிகப்பூ
பகலிலே வேலை செய் இரவிலே தூங்கு
பால் நிலவில் கண்விழித்தால்
உடம்புக்கு தீங்கு—உன்
உடம்புக்கு தீங்கு
தூங்கு தூங்கு தூங்குபோ

## பாட்டு (6) ஹரிதாஸ்

பாற்க் கடல் தனிலே
பாம்பின் மீதிலே
பைங்கொடி திருமகள் பக்கம் அமர்ந்திட
பங்கையின் நாபினில் பிரம்மனும்—தோன்றிட
பள்ளி கொண்டாய் டிங்கு ரங்கா
டிங்கு ரங்கய்யா . . . . ரங்கா
ரெங்கய்ய ரங்கா (டிங்கு)

ஊருமில்லையா—உமக்கு
நல்ல பேருமில்லையா
ஓரிடம் நிலையா—மனைவியா
உண்ண உணவுக்கும் வழியில்லாமல்
மண்ணைத்தின்று வளர்ந்தாயடா—நீ
டிங்கு ரங்கய்யா

## பாட்டு (7) ஹரிதாஸ்

ஒன்றானால் துன்பம்—மனமே
ஒன்றானால் துன்பம்
ரண்டும் ஒன்றானால்
கண்டிடும் இன்பம் . . . . . (ஒ)

அண்ட பிண்ட பிரம்மாண்ட
சராசர மெல்லாம்
ஐக்கிய மானது கணக்கினில் தானே . . . . (ஒ)

ஒண்ணு ஒண்ணு ஒண்ணு
ரண்டு ஒண்ணு ரண்டு
கணக்கைக் கூட்டினால்
கலந்து பெருக்கினால்
உனக்கு வாழ்வு பேரின்பம் தருமே . . . . (ஒ)

## பாட்டு (8) மனோஹரி

1. ஓ . . . . மனமோகனமாகும்-மகா
விந்தை தானுங்க—இங்கே
வந்து பாருங்க
மகத்தான வேடிக்கை எல்லாம்
உள்ளே தானுங்க . . . பலே ஜோருங்க . . . (மன)

2. வெள்ளையும் கருப்பும் கலந்த குதிரை
வேகத்திலே நிகர் இல்லே
வெட்டி மறையும் மின்னலைப் போல
பாயும் பார் இந்த வெள்ளை
வெள்ளிப் பணத்தைப் பந்தயம் வெச்சு
பாருங்க
லாபம் சேருங்க
ஓ . . . . ஐயாமாரே, ஆடிப்பாருங்க
பலே ஜோருங்க . . . . (ஓ மன)

3. பார்த்தால் மனுசன்போல பாடுங்க
ஆடுங்க
பதுமை ஆடும் காட்சி விநோதம் தாங்க
நாட்டிய ராணி யெல்லாம்
நடனத்தைக் கண்டாலே—
நாட்டிய ராணி யெல்லாம்—இந்த
நடனத்தைக் கண்டாலே

காணமடைய வேணுங்க—ஆமாங்க
ஆமாங்க
நல்லா பாருங்க
பலே ஜோருங்க . . . . (ஓ மன)

4. இனிமையும் அழகும் நிறைந்த கையால்
எழுதிய சித்திரம் பாருங்க
பாருங்க—கவனமாய் பாருங்க
இதை எதிரே நின்று பார்த்தால் போதும்
எல்லாப் பசியும் தீருங்க
மனசு மாறுங்க
நீயே எடுத்துக்க . . . சாமி
விலே தாருங்க
பலே ஜோருங்க . . . . . . . (ஓ மன)

5. விசித்திரமான மாயா ஜாலந்தான்
ஜாலந்தான்
விதவிதமாக இங்கே தெரியும் பாருங்க
அதிசயமான வித்தை
ஆளே மயக்கும் வித்தை
யாருக்கும் தெரியாத—அயல்
நாட்டு ஜால வித்தை
நல்லாப் பாருங்க
பலே ஜோருங்க . . . . (மனமோகன)

## பாட்டு (9) ராணி—நடனம்

காதல் கலேயில் இந்த மேதினிதனில்
ஏது உமக்கு நிகர் இல்லேயே
அறிவேன்—உம்மை இன்றுளே . . . (காதல்)

என் புதுமைதிகழும் உருவம்
எழில் பொங்கித் தவழும் பருவம்
நகையின் சிங்காரம்—நடன ஒய்யாரம்
தளுக்கும் குலுக்கும் உன் சொந்தமே
என்தளுக்கும் குலுக்கும் உன் சொந்தமே . . . (காதல்)

அந்த மிகுந்த சந்திரனே—அன்பின் ஜீவஜோதி நீயே
அமோகமாய் வாழலாம்
ஆனந்தமாமே என்னுளுமே தான்
அறியாப் பரவசம் உண்டாகுமே
நீ அறியாப் பரவசம் உண்டாகுமே . . . (காதல்)

## பாட்டு (10) ராஜாவும் கோமளமும்

கோ : அன்பாகும் ஜீவசஞ்சீவி—நீ—உன்
ஆசைத் தேன் ஊரும்
மலர்ச் செண்டு நான்—உண்ணும்
கரு வண்டு நீ . . . (அன்)

ரா : ஆ . . . . மாமலர் பூங்காவிலே
மனோகரமான தென்றலே
மருவிடும் போதே என்னுள்ளமே
மறந்தேன் எந்தன் காதல் ராணி

கோ : ராஜா

ரா : அன்பே என் ஜீவசஞ்சீவி நீ
என் ஆசைத்தேன் ஊரும் மலர் செண்டு நீ

கோ : உண்ணும் கருவண்டு நீ

### கோமளம், ராஜா

அன்பாகும் ஜீவசஞ்சீவி நீ

கோ : கண்ணிற் காணும் போதில்
என் மனம்
பிரேமகான மாரி பெய்யுதே . . . (உன்)

வண்ணமேனி பட்டால்—ஆ ஹா
இன்ப வாரி பாயுதே—ராஜா
எண்ணும் இன்பமொழி யாவுமே
இரு கண்கள் தூது பேசுதே

ரா : காதல் வலிமை தெரிந்ததா
கனி மொழியே ராணி
எது வந்தாலும்—எவர் சொன்னாலும்
இணைபிரியோம் நாமே
ஜோடியாக ஊஞ்சலாடுவோம்
எயில் சோபனப்பன் பாடவே (நாம் ஜோடியாக)

கோ : வளர் மாமதி போல
வளரும் பிரேமை தானே
வாரீர் நீர் மாரா

ரா : எழில் மா மோக ரதியே
மானே அதில் என் வாழ்வே
ஓடமாம் பாராய்

கோ : ஓடக்காரனும் நீயே

ரா : எந்தன் ஒளிசேர் கண்களும் நீயே

ராஜா—கோமளம்

ல......ல......லா......ல......ல......ல......லே......லோ
நாம் காணும் இவ்வுலக......நினைவை
மறந்து காதல் உலகம் போவோமா
போவோமா, போவோமா, போவோமா

## பாட்டு (11) அழகேசன்—தாரா

தாரா : உஹூம்......உஹூஉஹூம்......உஹூஉஹூம்.........
தலைவரிச்சே போட்டுக் கிட்டு
தையா தையுன்னு ஆடிகிட்டு
பச்செலைப் பாவடை கட்டி—வேப்பம்
பச்செலைப் பாவடை கட்டி
அப்படி இப்படி ஆடவே......நான்
மாட்டேன் மன்மத ராஜா
ஆட்மாட்டேன் மன்மத ராஜா
ஏ......மச்சான்......மாமா மாட்டேன்
செய்ய மாட்டேன்—மன்மத ராஜா என் ராஜா

அழ : கட்டிக்காமலே நீயும்
கட்டிக்காமலே தட்டிப் பேசவே
வேண்டாம்—இனி
அட்டி சொல்லவே வேண்டாம்
கஷ்டம் வந்திடும்
கஷ்டம் வந்திடும்......வேண்டாம்
மந்திரம் பலித்தால் பொல்லாதே
அதனாலே உஹூ உஹூன்னு சொல்ல வேண்டாம்

தாரா : ஏன் இந்த வேஷம் முடியாது போதும்
வீண் பிடிவாதம் தானே—மன
வேதனை யாகிடும் வீணே

நடுஜாம வேளை—படுகாளி போலே
வேஷத்தைப் போட்டு வேடிக்கை காட்டமாட்டேன்
மன்மத ராஜா—ஆடமாட்டேன் மன்மத ராஜா
ஏ......மச்சான் மாமா மாட்டேன்
மாட்டேன் மன்மத ராஜா
மாட்டேன்

அழ : நீ பேச்சை மீறி உளராதே—பெண்ணே
பேசின தெல்லாம் வீணு
பெண் பாவம் சுமந்திடும் தானு
பிடிவாதமாக முடியாது போல
அப்படி இப்படி செப்படி வித்தை
உஹூ உஹூம்னு சொல்ல வேண்டாம்
செய்ய மாட்டேன்னு சொல்ல வேண்டாம்
நீ உஹூ உஹூம்னு சொல்ல வேண்டாம்
சொல்ல வேண்டாம்
வேண்டாம்—வேண்டாம்—வேண்டாம்

## பாட்டு (12) நடனம்

கலைமதி நாணும் எழில் ஜோதி மின்னும் அழகியை
பெறுமணவாளன் இவர்தானே
எண்ணிப் பாரீர்—ஈடு சொல்வாரோ
குறைவுதான் என்ன—தெரியுமோ சொன்னல்
பெருமை சேர் மண மகன்
பெண்மை குணம் கொண்டவரோ
எண்ணிப் பாரீர்—என்ன சந்தேகம்

சீர் நிரைந்த, பேர் சிறந்த
திருமகள் உலவிடு மார்பன்
செல்வன் எங்கள் மாரன்
திருவடி நிகராகுமோ
தவம் செய்தே—வரம் பெற்றே
அடைந்தார் மோகினியை
தரனி ஆளும் ராஜ யோகம்
விரைவினில் இவர் பெருவார் (எண்ணி)

வேல் தயங்கும்—மான் மயங்கும்
விழிபெரும் இளை யவளாலே
மேவும் இன்பம் தானே
மணமகன் உறவினிலே

வளம் தங்கும், நலம் பொங்கும்
சுகம் தான் வாழ்வினிலே
வானும் மதியும் போலே
என்றும் மனமிக மகிழ்ந்திடுவார்
எண்ணிப் பாரீர் என்ன சந்தேகம்

## பாட்டு (13) மனோஹரி

கண்ணே என் பாலா நீ தாலோ
கலை ஞானக் காவிலே மேவும் களிப்பே தாலோ
காணாத மலர்ச்சோலை த்தேனே—கனியே
கண்ணார ஊஞ்சலாகும் கோனே தாலோ (கண்)

மகத்தான உன்சேவை—துதிப்பார்கள் கோடி
மாபெரும் ஸமஸ்தான
மகிபெறும் கூடி
மாறாத மகிழ் வோடு
வாயாரப்பாடி
மதிப்பார்கள் பாராள
வருவாய் நீ தாலோ (கண்)

மாமனார் உன் பாட்டன் மாரும்
உனக்காக மன்றாடித்தான் இந்த பேரும்
பூமாதும் கொஞ்சி வாழூரும்
புது வாழ்வை பொங்கி
நீடூழி வாழ்வாய் நீ (கண்)

## பாட்டு (14) சிங்கி

காச்சல் குளிரு கண்ணுவலி காதுவலி
காமநோய் நாலூத்து நாப்பத்தெட்டுக்கும் மருந்தோ......மருந்து

### பாட்டு

மருதைமலை பொதிய மலை மருந்தோ மருந்து
பிடிவாத ரோகம், வயித்துக் கடுப்பு
மனோவருத்தம் தீரவே (மருதை)

சொரி, சிரங்கு பொறி கரப்பான்
சுரங்கள் மேக சூலேக்கும்
காமாலே கண்டமாலேக்கும்—முழு
பைத்தியக்கார மூளேக்கும்
மருந்தோ......மருந்து
சஞ்சீவி மருந்தோ மருந்து

பாடாத குரலும் பாட
குயிலு கழுத்து லேகியம்
ஆடாத காலும் ஆட
மயிலு காலு சூரணம்
வீடான வீட்டிலிருக்க
வேணுமிந்த வேரு—இதை
வென்னீரில் உரைச்சுக் கொஞ்சம்
வீங்கின பக்கம் தடவிப்-பாரு
மருந்தோ மருந்து
சஞ்சீவி மருந்தோ மருந்து

கருத்த முடியும் வெளுக்கா திருக்க
காக்காச் சிறகுத் தயிலமிது
காலம் போன வாலிபம் திரும்பக்
கருங்குரங்குக் கற்பமிது
பெருத்த உடம்பைக் குறைக்கும் மருந்து
பேதிக்கும் சகல வியாதிக்கும் மருந்து
பெண்ணுக்கும் இருக்குது
ஆணுக்கும் இருக்குது—பெரிய
மனுசன் சிறுபுள்ளேக்கும் இருக்குது
மருந்தோ மருந்து
சஞ்சீவி மருந்தோ மருந்து

வைகுண்ட கைலாச வழிகாட்டும்
நோய் ரக்கை கண்ட செந்தூர மாத்திரை
உண்டு வாங்காமெ ஏன் ஆளேப் பாக்குரெ
மனம் வசமற்ற பெண்ணுக்கும்
ஆணுக்கும்
வசமாக்க வசிய மருந்துண்டு
கொடுக்கிறேன் . . . . உங்க
வருத்தங்கள் நீங்க
நானிருக்குறே
வாங்கய்யா, வாங்கம்மா
ஆ, அஹம்
(மருதமலே பொதியமலே மருந்தோ மருந்து)

## பாட்டு (15) ராஜா — மனோஹரி — கோமளம்

### கோரஸ்

ஆனந்தமே ஆகும் பேரானந்தமே
இதுவே ஆனந்தமே

ரா ; மன வாளன் மெய்யன்பே
மேலாய் போற்றும் மணியாளின்
ஆனந்தமே

மனோ : பிறர்காணாத பேரின்ப வாழ்வே
உம்மாலே கண்டேன்
இன்றே மண்மீதே

கோ : மனம் கோணாது நயமாக பேசி
ஜெயமே காணும் மாவீரன் நீரே

மனோ : என் வாழ்வாகும் வானில்
ஒளிவீசும் ஜோதி
இதுவே ஏழை என் ஆனந்தமே

### கோரஸ்

ஆனந்தமே ஆகும்
பேரானந்தமே

மனோ : புவியாவும் உன்லீலே
தானே மாதா—அருள்வாயே

### கோரஸ்

ஆனந்தமே ஆகும்
பேரானந்தமே
இதுவே ஆனந்தமே

சுபம்

M.P.H., Madras 2


வருகிறது!
ஜூபிடரின்
கைதி
64
டைரெக்ஷன்:
S.பாலசந்தர்
ஸ்டுடியோ:
சென்ட்ரல்
JUPITER PICTURES CIRCUIT